DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI
Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.
Judicial Magistrate, Manapparai

Date: 04.02.2026

STC No. 5/2024

சாட்சி : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி. சத்தியவாணி | ஜாதி | : |
| த/பெ/க/பெ. | : திரு. நடராஜன் | தொழில் | : விவசாயம் |
| கிராமம் | : அழகாபுரி | சமயம் | : |
| தாலுக்கா | : மருங்காபுரி | வயது | :60 /2026 |

( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்)

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 2 வருடத்திற்கு முன்பு தங்கவேலின் ஆடு எங்கள் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எதிரி கணேசன் தங்கவேலிடம் ஆடு மேய்ந்தது குறித்து தகராறு செய்துள்ளார். பின்னர் இரவு 11.00 மணியளவில் நான் வீட்டில் துாங்கி கொண்டிருந்த போது எதிரி கணேசன் எங்கள் வீட்டிற்கு வந்து நான் சொல்லிக்கொடுத்துதான் தங்கவேல் தன்னை அடித்தாக சொல்லி தடியால் என்னை கணேசன் இடது காலில் அடித்தார். மற்ற எதிரிகளும் இருவரும் அங்கு வந்து எனது முடியை பிடித்து அடித்தார்கள், நான் மயங்கிவிட்டேன். அதன்பின்னர் எனது மருமகள் ஆதிலெட்சுமி, ரேனுகாவும் வந்தார்கள். அதனால் நான் வளநாடு காவல்நிலையம் சென்ற போது அவர்கள் மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள். அதனால் நான் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 04.02.2026 |
| STC No. 5/2024 |
| சாட்சி : PW2 |

| | |
|---|---|
| பெயர் : திரு. நடராஜன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சின்னையா | தொழில் : விவசாயம் |
| கிராமம் : மருங்காபுரி | சமயம் : |
| தாலுக்கா : | வயது :63 /2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. 1ம் எதிரி எனது அண்ணன். 2ம் எதிரி அண்ணன் மனைவி, 3ம் எதிரி எனது அண்ணன் மகள். சுமார் 2 வருடத்திற்கு முன்பு தங்கவேலின் ஆடு எங்கள் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எதிரி கணேசன் தங்கவேலிடம் ஆடு மேய்ந்தது குறித்து தகராறு செய்துள்ளார், அது குறித்து எங்களுக்கு தெரியாது. பின்னர் இரவு 09.30 மணியளவில் நான் வீட்டில் துாங்கி கொண்டிருந்த போது எதிரிகள் கணேசன், தெய்வானை, அமுதா ஆகிய மூவரும் எங்கள் வீட்டிற்கு அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, நீ சொல்லிக்கொடுத்தால் தான் தங்கவேலுக்கும், எனக்கும் பிரச்சனை நடந்தது என்று சொல்லி எனது மனைவியை திட்டிகொண்டிருந்தார். அப்போது நான் வெளியில் வந்து பார்த்து ஓடிவருவதற்குள் எதிரி கணேசன் கையில் வைத்திருந்த கட்டையால் எனது மனைவியின் இடது தொடையில் அடித்து கீழே தள்ளிவிட்டார். அந்த சமயத்தில் 2, 3 எதிரிகள் எனது மனைவியின் தலையை பிடித்து கீழே தள்ளினார்கள், அதில் எனது மனைவி மயக்கமாவிட்டார். அந்த சமயத்தில் மருமகள் ஆதிலெட்சுமி, ரேனுகாதேவி வீட்டிலியே நீர்ஆதாரம் கொடுத்தார்கள். எனது மனைவியை ஆசுவாசபடுத்திய பின்னர் வளநாடு காவல்நிலையம் அழைத்து சென்றேன். அங்கு எங்களை மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். அதனால் எனதுமனைவியை மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன், போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 04.02.2026 | |
| STC No. 5/2024 | |
| சாட்சி : PW3 | |
| பெயர் : திருமதி. ஆதிலெட்சுமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சிவகுருதண்டபாணி | தொழில் : கூலி |
| கிராமம் : அழகாபுரி | சமயம் : |
| தாலுக்கா : மருங்காபுரி | வயது : 39/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார் . ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள். எதிரிகளுக்கும், எங்கள் மாமனார் குடும்பத்திற்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை இருந்து வந்ததது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு தங்கவேலின் ஆடு எங்கள் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எதிரி கணேசன் தங்கவேலிடம் ஆடு மேய்ந்தது குறித்து தகராறு செய்துள்ளார், அது குறித்து எங்களுக்கு தெரியாது. பின்னர் இரவு 09.00 மணியளவில் எனது மாமியார் வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது 1ம் எதிரி கணேசன் தடியால் இடது தொடையில் அடித்துவிட்டார். மற்ற எதிரிகளும் தகாத வார்த்தைகளால் பேசினார்கள். பின்னர் எனது மாமியார் மயங்கிவிட்டார். முதலில் வளநாடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள். பின்னர் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள், போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI
Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.
Judicial Magistrate, Manapparai

| | |
|---|---|
| Date: 04.02.2026 | |
| STC No. 5/2024 | |
| சாட்சி : PW4 | |
| பெயர் : திருமதி. ரேனுகா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. அருண்பாண்டியன் | தொழில் : தனியார் கம்பெனி |
| கிராமம் : அழகாபுரி | சமயம் : |
| தாலுக்கா : மருங்காபுரி | வயது : 35/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார் . ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள். எதிரிகளுக்கும், எங்கள் மாமனார் குடும்பத்திற்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை இருந்து வந்ததது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு தங்கவேலின் ஆடு எங்கள் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எதிரி கணேசன் தங்கவேலிடம் ஆடு மேய்ந்தது குறித்து தகராறு செய்துள்ளார், அது குறித்து எங்களுக்கு தெரியாது. பின்னர் இரவு 09.00 மணிக்கு மேல் எனது மாமியார் வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது 1ம் எதிரி கணேசன் தடியால் இடது தொடையில் அடித்துவிட்டார். மற்ற எதிரிகளும் தகாத வார்த்தைகளால் பேசினார்கள். பின்னர் எனது மாமியார் மயங்கிவிட்டார். பின்னர் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள், போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.